ஆல்ஃபிரட் சி. மசோனா
ஜிம்பாப்வே





# நான் செத்த மனிதன் – பகுதி 1

**“நீங்கள் ஒரு செத்த மனிதன். உங்களுடைய தோள்களுக்குக் கீழ் உங்களுக்கு எந்த உணர்ச்சியும் இருக்காது” என்று சொன்னார்.**

ஜிம்பாப்வேயில், கிறிஸ்துமஸுக்கு இரண்டு நாட்களுக்குமுன் மிகப்பெரிய சாலை விபத்தில் சிக்கினேன்; அதிலிருந்து நான் தப்பித்தது ஓர் அற்புதம்தான்.

என் பிள்ளைகள் தாத்தா பாட்டியுடன் வேறொரு நகரத்தில் இருந்தார்கள். அவர்களுடன் கிறிஸ்துமஸ் கொண்டாட நானும் என் மனைவி ஃபார்ச்சுனேட்டும் தலைநகர் ஹராரேயிலிருந்து கிளம்பினோம். சாலை முழுக்க மக்கள் கூட்டம்தான்; யாராவது தங்களை கார்களில் ஏற்றமாட்டார்களா என்று கைகளைக் காட்டி, நிறுத்த முயன்றார்கள். கிறிஸ்துமஸ் விடுமுறை என்பதால் பேருந்துகள் நிரம்பி வழிந்தன; எப்படியாவது வீட்டிற்குச் செல்லவேண்டும் என்கிற முனைப்பில் மக்கள் இருந்தார்கள்.

சாலையில் எங்களுக்கு அறிமுகமான ஒரு பெண்மணி நின்றிருந்தார்; அவரை ஏற்றிக்கொள்வதற்காக காரை நிறுத்தினோம். அவர் காரில் ஏறினதும், இன்னொரு ஆணும் பெண்ணும் தங்களையும் ஏற்றிக்கொள்ளுமாறு கெஞ்சினார்கள். அவர்களை எங்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்களைப் பார்க்க பரிதாபமாக இருந்ததால், அவர்களையும் ஏற்றினோம். மூன்று பேரும் காரின் பின் இருக்கையில் அமர்ந்தார்கள்.

அடுத்த கணமே எனக்கு சுய நினைவு இல்லாமல் போனது.

காரின் இருக்கை பட்டை அழுத்தியது. என்னால் அசைய முடியவில்லை. கண் இருட்டியது. தூரத்தில் மங்கலாக சில சத்தங்கள் கேட்டன. ஏதோ பயங்கரம் நடந்து விட்

டது என்பது மட்டும் புரிந்தது. கார் அசைந்ததை உணர முடிந்தது. பிறகு ஆம்புலன்ஸ் அல்லது காவல் வண்டியின் எச்சரிக்கை ஒலி ஒலித்ததைக் கேட்டேன். ஒரு சில கணம் கழித்து, என்னை ஆம்புலன்ஸில் ஏற்றுவது தெரிந்தது. ஒரு செவிலியர் என்னிடம், யாரையாவது அழைக்கவேண்டுமா என்று கேட்டார்.

“என்ன நடந்தது?” என்று அவரிடம் விசாரித்தேன்.

“விபத்து” என்று சொன்னார்.

இரண்டு பேர்களுடைய பெயரைக் கொடுத்து, அவர்களை அழைக்கும்படி கூறினேன். அதில் ஒருவர் போதகர்; இன்னொருவர் சபைத் தலைவர்.

மருத்துவமனையில் என்னைப் பார்க்க வந்த போதகர், “உங்களை உடனடியாக ஹராரே மருத்துவமனைக்குக் கொண்டுசெல்கிறோம்” என்று சொன்னார்.

அவர் செவிலியரிடம் ஃபார்ட்சுனேட்பற்றி விசாரித்தார். அவளையும் எங்களோடு வந்தவர்களில் இருவரையும் எங்களுக்கு பின்னால் வந்த ஒரு வேன், வேறொரு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்வதாகச் சொன்னார். அவளுக்கு உடலுக்குள் பயங்கர இரத்த கசிவு ஏற்பட்டிருந்தது. ஃபார்ட்சுனேட்டையும் ஹராரேக்குக் கொண்டுசெல்ல முடியுமா என்று செவிலியரிடம் கேட்டார்.

இரண்டு ஆம்புலன்ஸ்களை வரவழைத்தார்கள்; என்னையும் ஃபார்ட்ச்சுனேட்டையும் ஹராரேவுக்குக் கொண்டுசென்றார்கள். மருத்துவமனைக்குக் கொண்டுசென்றதுதான் கடைசியாக எனக்கு நினைவில் இருந்தது.

அடுத்த இரண்டு நாட்களில், அதாவது டிசம்பர் 24,25 தேதிகளில் எனக்கும் ஃபார்ட்ச்சுனேட்டுக்கும் மூன்று அறுவை சிகிச்சைகள் நடைபெற்றன. இருக்கை பட்டை அழுத்தி, சிறுகுடலைச் சேதப்படுத்தியதால் என் மனைவியின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருந்தது. அவளுடைய சிறுகுடலில் 16 அங்குலத்திற்கு மருத்துவர்கள் வெட்டி, அகற்றினார்கள். அவளுடைய உள்ளங்கை மற்றும் இடது பாதத்திலும் பயங்கரமாக அடிபட்டிருந்தது. உலோக கம்பிகளை வைத்து, அறுவை சிகிச்சை செய்தார்கள்.

எனக்கு இடது முன்கையிலும், வலது காலிலும் உலோக கம்பி வைத்தார்கள். முதுகு தண்டு உடைந்ததுதான் எனக்கு மிகப்பெரிய காயம். கழுத்தின் முன்பக்கத்தில் துளையிட்டு, நான்காம் மற்றும் ஐந்தாம் கழுத்து முள்ளெலும்பில், உலோகத்தை வைத்து அறுவைசிகிச்சை செய்தார்கள். பிறகு என் கழுத்து முள்ளெலும்பு பகுதியின் எக்ஸ்ரேயை என்னிடம் காண்பித்து, “உலகத்தில் எந்த மருத்துவரிடம் வேண்டுமானாலும் இந்த எக்ஸ்ரேயைக் காட்டுங்கள். இப்போது நான் சொல்கிறதைத்தான் அவர் சொல்லுவார். அதாவது நீங்கள் ஒரு செத்த மனிதன். உங்களுடைய தோள்களுக்குக் கீழ் உங்களுக்கு எந்த உணர்ச்சியும் இருக்காது” என்று சொன்னார்.

சுமார் இரண்டு வாரங்களுக்கு

பிறகு, தீவிர உடல்சார் இயக்கப் பயிற்சிக்காக என்னையும் ஃபார்ட் சுனேட்டையும் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள். அடுத்த ஆறு வாரங் கள் நடப்பதற்குப் பயிற்சி எடுத் தோம்.

அந்த விபத்தில் ஐந்து பேர் மரித்ததாக அதற்கு பிறகுதான் கேள் விப்பட்டோம். நேருக்கு நேர் மோதி விபத்து ஏற்பட்டிருக்கிறது. எதிரே வந்த காரை, குடித்துவிட்டு ஒரு வாலிபன் வேகமாக ஓட்டி வந் திருக்கிறான். உருகுலைந்த இரண்டு கார்களையும் பின்னர் நாங்கள் பார்க்க நேரிட்டது. இரண்டுமே ஒரே வகை கார்கள்தாம். என்னுடைய வண்டியின் வேகங்காட்டி முள் மணிக்கு 90 கிலோமீட்டர் அளவை யும், அவனுடைய காரின் வேகங் காட்டி முள் மணிக்கு 170 கிலோ மீட்டர் அளவையும் காட்டியவாறு நின்றிருந்தன.

பின் இருக்கையில் அமர்ந் திருந்த எங்களுக்கு தெரிந்த பெண் மணி சம்பவ இடத்திலேயே மரித்து விட்டார். எங்களிடம் கெஞ்சி, வண்டியில் ஏறின, முன்பின் தெரி யாத அந்த நபர்கள் அடுத்த நாள் உயிரிழந்தார்கள். எங்கள் வண்டி யில் மோதின வண்டியில் மூன்று பேர் இருந்திருக்கிறார்கள். குடிகார ஓட்டுனரும், அவனுக்கு அருகில் முன்பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு மூதாட்டியும் சம்பவ இடத்திலேயே மரித்துவிட்டார்கள். பின்இருக்கை யில் அமர்ந்திருந்த ஒருவரை மருத் துவமனைக்குக் கொண்டுசென்றிருக் கிறார்கள். அவர் உயிருடன் இருக் கிறாரா இல்லையா என்று இன்று வரை எங்களுக்குத் தெரியாது.

இதையெல்லாம் கேட்டதும் எனக்கும் ஃபார்ட்ச்சுனேட்டுக்கும் அதிர்ச்சியாக இருந்தது. தேவன் எங்களை அற்புதமாகப் பாதுகாத் திருக்கிறார்.

அந்த அற்புதம் அதோடு முடிய வில்லை. நான்கு மாதங்கள் கழித்து, ஏப்ரலில், நான் ஏற்கனவே திட்ட மிட்டிருந்தபடி சொலுஸி பல்கலைக் கழகத்தில் போதகர்களுக்கான வகுப்பைத் தொடங்கமுடிந்தது.

**ஆல்ஃபிரட் சி. மசோனா**

## கதைக் குறிப்புகள்

- இந்தச் சம்பவத்தை யாராவது ஒருவர் தன் சொந்த அனுபவம்போலச் சொல்லலாம்.
- ஆல்ஃபிரட்பற்றி அடுத்தவாரம் அதிகமாக வாசிக்கலாம்
- முகநூலில் புகைப்படங்களைப் பதிவிறக்குவதற்கு: ***bit.ly/fb-mq.***
- தென் ஆப்ரிக்கா – இந்தியப் பெருங்கடல் டிவிஷனிலிருந்து தகவல் பதிவிறக்க: ***bit.ly/sid-2022.***
- ‘இடிமுழங்கும் புகை மூட்டம்’ என்று அழைக்கப்படும் விக்டோரியா நீர்வீழ்ச்சி ஜிம்பாப் வேக்கும், சாம்பியாவுக்கு இடையே அமைந்துள்ளது; அது உலகின் மிகப்பெரிய நீர் வீழ்ச்சியாகும்.